1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, அச்சகத் தொழிலாளர்களுக்கும், திரையரங்கு தொழிலாளர்களுக்கும் விரைவில் ஒரு குழு அமைக்கப்பட இருக்கிறது.

கண்ணொளி வழங்கு திட்டம்.

*250 வினா—திரு. எல். கணேசன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

முதலமைச்சர் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலம் இதுவரை எத்தனை பேர்களுக்கு கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பெயரால் அமைந்துள்ள கண்ணொளி வழங்கும் திட்டத்தின்மூலம் இதுவரை—31—3—1975 வரை—6,66,432 பேர்களுக்குக் கண் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கண் சிகிச்சை பெற்று ஆபரேஷன் நடந்தவர்களுக்குக் கண்ணாடி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இதைத் தவிர்ப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவ்வாறு கண்ணிலே புரை அறுவை சிகிச்சை நடந்த 93,476 பேர்களுக்கு ஏறக்குறைய ஒரு வார காலத்தில் அல்லது இரண்டு நாட்கள் வேற்றுமையில் கண்ணாடி வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரம் கழித்து வரும்பொழுது சிலருக்கு அந்தக் கண்ணாடி அல்லது ஃப்ரேம் பொருத்தமாக இல்லை என்று தாமதம் ஆகலாமே தவிர, பெரும்பாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிப்பிலே நடைபெறுகிறது. ஆகவே, பெரும்பாலும் கண்ணாடி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகப் புகார் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்தக் கண் சிகிச்சை செய்வதில் தனிப்பட்ட சில தொண்டுள்ளம் படைத்த சங்கங்கள்கூட ஈடுபடுகிறார்கள், உதாரணமாக, லயன்ஸ்

களைப் போன்றவைகள் கண் சிகிச்சை முகாம் அமைத்து சிகிச்சை செய்து வருகின்றன. அதற்காக ஒரு மருத்துவ மனையையே வைத்துக்கூட திருப்பூர் போன்ற இடங்களில் நடத்தப்படுகிறது. அவைகளுக்கு அரசாங்கம் உதவி செய்து அவர்களின் பணியை இன்னும் தீவிரப்படுத்தவும், அதிகப் படுத்தவும் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படி நடைபெறுவது மிகக் குறைவானது. அப்படி நடைபெற்றாலும் ஒன்றிரண்டு இடங்களில் ஒரு நாளைக்கு ஒருவர் இருவர்தான் சிகிச்சை பெறும் வாய்ப்பு இருக்கிறது. முகாம் நடத்தும் முறையிலே அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு பரவலாகத் திட்டமிட்டு கிராமங்களுக்குத் தெரிவித்து அரசு அலுவலாளர் கள் பலயிடங்களுக்குச் சென்று கண் பரிசோதனை நடத்தி மக்களை அழைத்து வந்து நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட முகாம்களில் 300 பேர், 400 பேர், 1000 பேர்களுக்குப் புரை அறுவை சிகிச்சை நடைபெறுவது என்பதைப் பார்க்கும் பொழுது மற்றவர்கள் அதில் 100-க்கு 1 பங்குகூட நடத்த வாய்ப் பில்லை. எங்கேயாவது அவர்கள் ஆர்வத்தோடு நடத்தினால் அது பாராட்டுக்குரியதாகும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், கண் கோளாறு உள்ள இலட்சக் கணக்கானவர்களுக்குச் சிகிச்சை செய்திருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இப்படிக் கண்ணில் கோளாறு உள்ளவர்கள் சிகிச்சை செய்து கொண்டதற்குப் பின்னால் அவர் களுக்கு மீண்டும் மீண்டும் கண்ணில் கோளாறு உண்டாகாமல் தடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படச் செய்ய வேண்டியது அவசிய மாகும். அப்படி மீண்டும் கோளாறு வருவதற்குச் சத்துணவு இல்லாமை இன்னும் இதர காரணங்கள் இருக்கலாம் என்று சொல்கிறார்களே. ஆகவே, சிகிச்சை செய்தவுடன் கோளாறு மேலும் உண்டாகாமல் தடுக்கத்தக்க ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பாரத பூமி தங்க பூமியாக ஆனதற்குப் பிறகு சுரேந்திரன் அவர் களுடைய ஆசை நிறைவேறும். 50 வயதுக்கு மேல் ஆனவர் களுக்கு இந்தச் சத்துணவு தருவது என்ற முறையிலே பெரும் பலன் ஏற்படுவது இல்லை. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத்

1975 நவம்பர் 10]

தரப்படுகின்ற சத்துணவுதான் 20 வயதுவரை வளம் தரும். அதுவும் 20 வயதுக்குள் தரும் வளம்தான் 60 வயதுவரை ஊட்டத்தைத் தரும். ஆகவே, திரு. சுரேந்திரன் இனி குழந்தை யாக முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த 'மெட்ராஸ் ஐ' என்பது பரவ ஆரம்பித்து, அது 'எபிடமிக்' மாதிரி பரவியது. அது முழுமையாக மாநிலத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் அதுபற்றி அவையிலே நான் தனியாக விளக்கம் தந்தேன். பெரும்பாலும் நின்று விட்டது. காற்று அடிக்கிற வகையிலே வந்தது, மறுபடி எந்தக் காற்று அடித் ததோ, போய் இருக்கிறது.

மாதர்பாக்கம் மருத்துவ மனைக் கட்டடம்.

*251 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பாதிரிவேடு மாதர்பாக்கம் அரசினர் மருத்துவ மனைக்குரிய புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ & இ) இதுபற்றிச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு இயக்குநரின் ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மேற்கண்ட ஊரில் அரசினர் மருத்துவமனைக்குரிய கட்டிடம் கட்ட ஊர் மக்களே சேர்ந்து அமைச்சரிடம் நேரில் ஒரு பகுதி நிதியைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. இதற்கு விரைவாக முன்னுரிமை கொடுத்து அந்த ஊரிலே அரசாங்க மருத்துவ மனைக்கான கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்றால் அங்கே ஏராளமான